# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2444/21 - 2025 ජූලි මස 08 වැනි අඟහරුවාදා - 2025.07.08

*2444/21ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பைத் திருத்தம் செய்தல் - திருத்த இலக்கம் 03**

கீழே பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்ட 2014, ஒற்றோபர் மாதம் 23ஆந் திகதிய மற்றும் 1885/38 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பானது பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீண்டும் திருத்தம் செய்யப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**நாலக கலுவெவ,**
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு.

2025, யூலை 07.

பகுதி I

திருத்த இலக்கம் 01- 2019, ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி மற்றும் 2120/2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை.

திருத்த இலக்கம் 02- 2021, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி மற்றும் 2255/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை.

பகுதி II

08. வினைத்திறன்காண் தடைதாண்டல்:

08.1. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய வினைத்திறன்காண் தடைதாண்டலைப் பூர்த்தி செய்தல் வேண்டும்

| எவ்வகையான வினைத்திறன்காண் தடைதாண்டல் என்பது தொடர்பாக | ஏற்புடைய தரம் | எத்தனை வருடங்களுக்கு முன்னர் வினைத்திறன்காண் தடைதாண்டலில் சித்தியடைதல் வேண்டும் | வினைத்திறன்காண் தடைதாண்டலின் தன்மை எழுத்துமூலப் பரீட்சை/ தொழில்சார் பரீட்சை சான்றிதழ் பாடநெறி/வேறு |
|---|---|---|---|
| I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | வகுப்பு 3 தரம் II | உரிய தரத்திற்கு நியமிக்கப்பட்டு மூன்று(03) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்துமூலப் பரீட்சை அட்டவணை 01 |
| | வகுப்பு 3 தரம் I | | |
| | 13.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமானி பட்டத் தகைமையின் அடிப்படையில் 2 ஆம் வகுப்பின் தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆசிரியர்கள் | | |
| II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | 13.8 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமானி தகைமையின் அடிப்படையில் 2 ஆம் வகுப்பின் தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆசியரியர்கள் தவிர்த்து 2 ஆம் வகுப்பின் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்ட /நியமிக்கப்பட்ட ஏனைய ஆசிரியர்கள் | 2 ஆம் வகுப்பின் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டு/ நியமிக்கப்பட்டு நான்கு (04) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்துமூலப் பரீட்சை அட்டவணை 01 |
| III ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | வகுப்பு 2 தரம் I | 2 ஆம் வகுப்பின் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டு நான்கு (04) வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்துமூலப் பரீட்சை அட்டவணை 01 |

8.2. பரீட்சை எவ்வளவு காலங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படும் : வருடமொன்றில் இரண்டு தடவைகள் நடாத்தப்படும்.

8.3. பரீட்சையை நடாத்தும் அதிகாரி: நியமிப்பு செய்யும் அதிகாரி அல்லது நியமிப்பு செய்யும் அதிகாரியினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளால் அல்லது நியமிப்பு செய்யும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வேறு பொருத்தமான நிறுவனமொன்றினூடாக நியமிப்பு செய்யும் அதிகாரியினால் விதிக்கப்படும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடாத்தப்படும்.

வினைத்திறன்காண் தடைதாண்டலைப் பூர்த்தி செய்தவற்கு ஏற்புடைய ஏனைய ஏற்பாடுகள்

(i) சேவையின் 3 ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆசிரியர்கள் 2 ஆம் வகுப்பின் தரம் II இற்குப் பதவி உயர்வை பெற்றுக்கொள்வதற்காக முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இருப்பினும், சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.6.2, 7.2.6.4, 7.2.6.5 மற்றும் 7.2.6.6. இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் 2 ஆம் வகுப்பின் தரம் II இற்கு நியமிக்கையில் 3 ஆம் வகுப்பிற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டலைப் பூர்த்திசெய்திருத்தல் அவசியமற்றது. இருப்பினும் , அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 2 ஆம் வகுப்பின் தரம் II சேவையில் முதல் நியமனத் திகதியிலிருந்து மூன்று (3) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டலில் சித்தியடைதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக அவர்கள் 2 ஆம் வகுப்பின் தரம் II இற்குரிய இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையினை 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட தினத்திலிருந்து நான்கு (4) வருடங்களுக்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**10. தரங்களுக்கு பதவி உயர்த்துதல்:**

10.1.1.1. (iii) - அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு நடைமுறைக்கமைய பதவி உயர்விற்குரிய தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிக்காட்டியிருத்தல்.

10.2.1.1. (iii) - அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு நடைமுறைக்கமைய பதவி உயர்விற்குரிய தினத்திற்கு உடன் முன்னரான மூன்று (03) வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிக்காட்டியிருத்தல்.

10.3.1.1. 1.(iv) - அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு நடைமுறைக்கமைய பதவி உயர்விற்குரிய தினத்திற்கு உடன் முன்னரான ஒன்பது(09) வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிக்காட்டியிருத்தல்.

10.3.2.1.1. (iv) - அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு நடைமுறைக்கமைய பதவி உயர்விற்குரிய தினத்திற்கு உடன் முன்னரான ஏழு (07) வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிக்காட்டியிருத்தல்.

10.3.3.1. 1.(iv) - அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு நடைமுறைக்கமைய பதவி உயர்விற்குரிய தினத்திற்கு உடன் முன்னரான ஏழு (07) வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிக்காட்டியிருத்தல்.

10.3.4.1.1. (iv) - அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு நடைமுறைக்கமைய பதவி உயர்விற்குரிய தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்பதிகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிக்காட்டியிருத்தல்.

10.4.1.1. (iv) - அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு நடைமுறைக்கமைய பதவி உயர்விற்குரிய தினத்திற்கு உடன் முன்னரான ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிக்காட்டியிருத்தல்.

11.2.3. - நீக்கப்படுகின்றது.

"ஈ" பின்னிணைப்பு - நீக்கப்படுகின்றது.

**அட்டவணை 01**

**வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை நடைமுறைப்படுத்தப்படும் முறை**

01. வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையானது கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும் சுய கற்றல் இதவடிவங்கள் சார்ந்ததாக நடைபெறும். இவ் இதவடிவங்கள் கல்வி விடயத்திற்கு பொறுப்பான நிரல் அமைச்சினால் தேவைக்கேற்ப காலத்திற்குக் காலம் இவ் இதவடிவங்கள் திருத்தம் செய்யப்படும்.

02. பாடத்திட்டம்:

| வினைத்திறன்காண் தடைதாண்டல் | ஏற்புடைய இதவடிவங்கள் |
|---|---|
| I ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | 1. ஆசிரியர் தேர்ச்சி சட்டகம் மற்றும் ஆசிரியர் தொழில்வாண்மைத்துவம் |
| | 2. கற்பித்தல் செயல்முறை |
| | 3. கல்விக்கு டிஜிட்டல் தொழில்நுட்பம் |
| | 4. கல்வி தொடர்பான சட்டம் |

| *வினைத்திறன்காண் தடைதாண்டல்* | *ஏற்புடைய இதவடிவங்கள்* |
|---|---|
| II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | 5. தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் |
| | 6. செயற்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதற்கான விளைத்திறனான நுட்ப முறைகள் |
| | 7. வகுப்பறை முகாமைத்துவம் மற்றும் உட்படுத்தல் கல்வி |
| III ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் | 8. உடல் மற்றும் உளநலன் பேணல் |
| | 9. இருபத்தியோராம் நூற்றாண்டின் பாடசாலை |
| | 10. செயன்முறை அடிப்படையிலான ஆராய்ச்சி |

03. ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டலுக்குமான எழுத்து மூலப் பரீட்சையானது அதற்குரிய இதவடிவங்கள் உள்ளடங்கும் வகையில் கீழ்வருமாறு கட்டமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| *கட்டமைப்பு* | *வினாக் கட்டமைப்பு* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| வினாத்தாள் I | பல்தேர்வு வினாக்கள் | 01 மணித்தியாலம் | 40 |
| வினாத்தாள் II | சிறு வினாக்கள் | 02 மணித்தியாலம் | 60 |

04. சித்தியடைவதற்கு வினாத்தாள் I மற்றும் வினாத்தாள் II இன் புள்ளிகளின் கூட்டுத்தொகை 40 % இற்கு மேற்பட்டதாக பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

05. எழுத்துமூலப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பிய ஒரு மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

EOG 07-0088

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.